ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1478/11 - 2007 ජනවාරි 02 වැනි අඟහරුවාදා - 2007.01.02
1478/11 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் இம்புல்பே பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இம்புல்பே பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அதன் ஏழாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்து ஒப்பமிடப்படாமை காரணமாக, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

திரு. விதானேலாகே துஷார தம்மிக என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் இம்புல்பே பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின்கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளார் ஆதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. தெமல முனிகே விஜய குமார டயஸ் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது இம்புல்பே பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், மாத்தர ஆச்சிகே பத்மசிறி சந்ரவங்ச பெரேரா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. தெமல முனிகே விஜய குமார டயஸ் என்பவர், இம்புல்பே பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். ஏ. பீ. சீ. பெரேரா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இம்புல்பே பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
*2006, திசெம்பர் 18.*

*1-281*